**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.182/2011**

**தேதி : 17.06.2026**

**(பி.வா.சா. 2 ) – திரு. முத்து**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (வாதி தரப்பில்)**

நான் பிளஸ் டு படித்துள்ளேன். வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். சொத்து வேண்டும் என மகள்கள் அவர்களுடைய தகப்பனார் மீது போட்டுள்ளார்கள். காளிமுத்து விவசாயம் பார்த்தார். அவரை எனக்கு சுமார் 10 ஆண்டுகளாக தெரியும். அவருக்கு இரண்டு மனைவிகள். இரண்டாவது மனைவியின் பெயர் வெள்ளையம்மாள் என்பது மட்டும் எனக்கு தெரியும். முதல் மனைவி மற்றும் அவரது குழந்தைகள் பற்றிய விவரம் எனக்கு தெரியாது. இரண்டாவது மனைவிக்கு 4 ஆண்பிள்ளைகள். 4 பெண் பிள்ளைகள் உள்ளார்கள். 15.10.2004 உயிலில் சொத்து விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி உயில் ஸ்டாம்ப் பேப்பரில் எழுதப்பட்டுள்ளது. வேறு ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் சொத்து விற்பனை செய்த ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். 2 உயிலிலும் யார் யாருக்கு எவ்வளவு சொத்து கொடுக்க வேண்டும் என்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. 2 உயிலிலும் உறவுமுறைகள் விவரம் சரியாகப் போடப்பட்டுள்ளது. அந்த விவரம் எனக்கு தெரியும். காளிமுத்து மகன்களுக்கு ஆதரவாக சாட்சி சொல்ல வந்திருக்கிறேன்.

குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

RAJA B

Digitally signed by RAJA B
Date: 2026.06.17 17:48:23 +0530